| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AKHBAR** | **:** | **MALAYSIA NANBAN** | **MUKA SURAT** | **:** | **3** |
| **TARIKH** | **:** | **02 OKTOBER 2023** | **HARI** | **:** | **ISNIN** |
| **SENTIMEN :** | | **POSITIF** | | | |

# 2023 எஸ்.எஸ்.பி.என். சேமிப்பு மாதம்

## பிள்ளையின் மாவீரராக மாறுவதற்கு பெற்றோருக்கு மறுவாய்ப்பு

பெட்டாலிங் ஜெயா, அக். 2-

பி.டி.பி.டி.என். என்ற தேசிய உயர்கல்வி கடனுதவிக் கழகம் நேற்று 2023 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.பி.என். சேமிப்பு மாதத் திட்டத்தை தொடக்கி வைத்தது. வருடந் தோறும் அக்டோபர் 31ஆம் தேதியன்று உலக சேமிப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு எஸ்.எஸ்.பி.என். சேமிப்பு மாத திட்டத்தை பி.டி.பி.டி.என். தலைவர் டத்தோ நோர்லிஷா அப்துல் ரஹிம் சிலாங்கூர் சன்வே பிரமிட் மால் அரங்கில் தொடக்கி வைத்தார்.

தொடக்க விழாவில் உயர் கல்வியமைச்சின் துணைத் தலைமை செயலாளர் டத்தோ டாக்டர் ஹாஜி முகமட் சானி பின் முகமட் அகமட் சபியான், பி.டி.பி.டி.என். கடனுதவி கழகத்தின் தலைமை செயல்முறை அதிகாரி அகமட் டசுக்கி அப்துல் மஜிட், பி.டி.பி.டி.என். வாரிய உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2023 ஆம் ஆண்டு எஸ்எஸ்பிஎன் சேமிப்பு மாதத் திட்டம் என்பது பி.டி.பி.டி.என்னின் குறிப்பிடத்தக்கதொரு திட்டம். சேமிப்பின் முக்கியத்துவத்தை இது எடுத்துரைக்கிறது. எஸ்.எஸ்.பி.என். சேமிப்புத் திட்டம் என்பது மலேசிய சமுதாயத்தின் முதன்மையான தேர்வு என்று இது பிரதிபலிக்கிறது என டத்தோ நோர்லிஷா அப்துல் ரஹிம் தமது உரையில் கூறினார்.

2018 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய வருடாந்திரத் திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. களமிறங்கி காரியமாற்றும் வண்ணம் இத்தகைய நிகழ்வு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் தேதியிலிருந்து அக்டோபர் முதல் தேதி வரையில் சிலாங்கூர் சன்வே பிரமிட் மால் அரங்கில் நடைபெற்றது.

சேமிப்பு மாதத் திட்டம் என்பது முந்தைய ஆண்டினை காட்டிலும் வித்தியாசமாகவும் பிரத்தியேகமாகவும் விளங்கியது. சாலை சுற்றுலாப் பயணம் என்ற கோட்பாட்டின் மூலம் முதல் முறையாக இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. 14 மாநிலங்களை உள்ளடக்கிய பயணம். நாடு முழுவதும் இதற்காக பிரத்தியேக பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அக்டோபர் 1ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை நடைபெறும். டத்தோ நோர்லிஷா அப்துல் ரஹிம் மேலும் கூறியது:

BMS 2023 என்ற சேமிப்பு மாதத் திட்டத்தின் கருப்பொருள் Robotik. இலக்கவியல் உலகம் உருமாற்றத்தை நோக்கிச் செல்வோம். உங்கள் பிள்ளையின் மாவீரராக மாறுவோம் வாரீர் என்ற சுலோகத்தை இது கொண்டுள்ளது. இந்த கோட்பாடு மிகவும் மதிப்பு வாய்ந்தது.

காரணம் அறிவியலும் Teknologi robot ஆகியவை முன்னேற்றத்துடன் நெருங்கிய தொடர்பு உடையவை. ஆக இறுதியான தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவு தேவை. பி.டி.பி.டி.என் இலக்கவியல் திட்டத்திற்கு இது ஏதுவான ஒன்று. இலக்கவியல் விஷயத்தில் பி.டி.பி.டி.என். முதன்மை கவனம் செலுத்துகிறது.

கடன் பெறுபவர்கள் Simpan SSPN சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்பவர்கள் ஆகியோர் my PTPTN செயலியை பயன்படுத்துவதை இது ஊக்குவிக்கிறது. இத்தகைய அணுகுமுறை காரணமாக ஒரு பணியினை மிக எளிதாகவும் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ள முடிகிறது.

பெற்றோர்களும் பிள்ளைகளும் ஆர்வமுடன் பங்கேற்கும் வண்ணம் உற்சாகமூட்டும் பல்வேறு கவர்ச்சிகரமான நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வண்ணம் தீட்டும் போட்டி, பாடல் திறன் போட்டி, அறிவுத் திறன், மகிழ்வான நேரம், புத்தாக்கம், திரை பிரபலங்கள் பங்கேற்பு போன்று இப்படியாக அடுக்கடுக்கான நிகழ்ச்சிகள் வரிசை பிடித்து நிற்கின்றன.

Cabutan BMS 2023 என்ற அதிர்ஷ்ட குலுக்கல் அம்சம் BMS 2023 திட்டத்திற்கு மேலும் சிறப்பினையூட்டும். இவ்வாண்டும் இது தொடர்கிறது. இதற்கான ரொக்கப் பணம் 75,000 வெள்ளி. மொத்தம் 66 வெற்றியாளர்களுக்கான வெகுமதி இது.

BMS 2023 என்ற சேமிப்புத் திட்டத்தை போற்றி வருவது பி.டி.பி.டி.என். தங்கள் பிள்ளைகளின் உயர்கல்விக்காக தக்கதொரு நிதி வசதி திட்டத்தை பெற்றோர்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவது பி.டி.பி.டி.என்.னின் நோக்கமாகும். இவ்விஷயத்தில் பிள்ளைகளின் மாவீரர்களாக பெற்றோர்கள் விளங்குவதை பி.டி.பி.டி.என். உறுதிப்படுத்துகிறது.

Simpan SSPN திட்டத்தை அறிமுகப்படுத்தி 19 ஆண்டுகள் ஆகின்றன என்கிறார் பி.டி.பி.டி.என். தலைவர் டத்தோ நோர்லிசா அப்துல் ரஹிம். வருடந்தோறும் எஸ்எஸ்பிஎன் வைப்புத் தொகை சேமிப்பு எப்போதுமே உயர்ந்திருக்கிறது. 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் தேதி வரையிலான Simpan SSPN சேமிப்புத் தொகை 15.81 பில்லியன். சேமிப்புக் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை 6.04 மில்லியன். Simpan SSPN வெற்றி நடைபோட்டு வருகிறது. பெற்றோர்களின் தலைசிறந்த சேமிப்பாக இது விளங்குகிறது.

BMS திட்டம் உருவாக்கப்பட்ட இந்த ஐந்தாண்டு காலத்தில் வைப்புத் தொகையின் அளவு அமோகமாக இருக்கிறது. எனவே BMS 2023 என்ற திட்டத்திற்கு மலேசிய மக்கள் மத்தியில் அமோக ஆதரவு கிட்டும் என்று தாம் நம்பிக்கை கொள்வதாக பி.டி.பி.டி.என். தலைவர் டத்தோ நோர்லிசா தெரிவித்தார். BMS-க்கான Simpan SSPN வைப்புத் தொகை 220 மில்லியனாக இருக்க வேண்டும் என்ற இலக்கினை பி.டி.பி.டி.என். கொண்டுள்ளது.

Simpan SSPN மலேசிய சமுதாயத்திற்கு பல்வேறு அனுகூலங்களை வழங்குகிறது. வருடத்திற்கு 8,000 வெள்ளி வரையிலான வருமான வரி விலக்களிப்பு, காப்புறுதி பாதுகாப்பு, கவர்ச்சிகரமான லாப ஈவு தொகை ஆகியவை இதில் அடங்கும். அதிர்ஷ்ட குலுக்கல் உட்பட அநேக ஆக்ககரமான பிரச்சார இயக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

Simpan SSPN சேமிப்புத் திட்டம் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விரிவாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பி.டி.பி.டி.என். கடமை கடப்பாட்டினை கொண்டுள்ளது. BMS 2023 என்பது குறித்து மேலும் விவரமறிய www.ptptn.gov.my/BMS 2023 என்ற அகப்பக்கத்தை அலசுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று டத்தோ நோர்லிஷா அப்துல் ரஹிம் மேலும் கூறினார்.







**TRANSLATION:**

The National Higher Education Fund Corporation (PTPTN) has launched its annual saving campaign, 'Bulan Menabung Simpan SSPN (BMS) 2023' to encourage parents to start or continue depositing to save for their children's higher education. The nationwide programme which is in conjunction with World Savings Day, observed on Oct 31 every year, has in line a variety of activities and educational sub programmes throughout October. PTPTN chairman Datuk Norliza Abdul Rahim launches the event at Selangor Sunway Pyramid. Also present at the ceremony were Higher Education Ministry deputy secretary Datuk Dr Megat Sany Megat Ahmad Supian and PTPTN chief executive Ahmad Dasuki Abdul Majid. She said PTPTN's commitment in encouraging a savings culture and is in line with the agency's aspirations to transform the community's mindset from borrowing to saving to prevent their children from being saddled with debt after graduation. She said BMS is its annual signature programme, implemented in 2018 with the aim to improve savings practices in addition to promoting Simpan SSPN as a product of choice. The campaign conducted from September 28th 2023 until October 1st at Selangor Sunway Pyramid mall. BMS 2023 will bring a difference compared to the previous year because it will be held for the first time through the concept of a road tour across 14 states in selected locations nationwide this month. BMS runs until Oct 31, with the

theme of 'Robotic' and tagline 'Jom jadi superhero anak anda'(Let's become your children's hero), in line with the PTPTN digitalisation effort focusing on increasing the usage of the myPTPTN app for a seamless and safe operation. Among the programmes available for parents and children include a Robotic competition, 'SSPN Got Talent', PTPTN Esport Challenges, Ambassador meet-and-greet, Jenga family competition, BMS Hints Challenges and more. Throughout BMS 2023, PTPTN is also offering a lucky draw of up to RM75,000 worth of cash prizes for 66 winners and participating depositors nationwide. As of Aug 31, 2023, the amount of Simpan SSPN deposits was RM15.81 billion, under 6.04 million accounts. PTPTN chairman Datuk Norliza Abdul Rahim said BMS 2023 has a target of RM220 million in savings throughout the programme, which she is confident it will achieve. The Simpan SSPN Prime account offers numerous advantages to Malaysians including tax relief of up to RM8,000 annually, free takaful coverage, competitive dividends and shariah-compliant government-guaranteed savings. Further information can be found on https://www.ptptn.gov.my/BMS2023/ and PTPTN's social media.